[உலகிலேயே_சிறந்த_புத்தகம்](#) Soundar rajan 21 - 01 - 2021 .

!
நான் பொதுவாகவே ஓவியர், கலை இலக்கிய விமர்சகர், மொழி பெயர்ப்பாளர் , எழுத்தாளர், கவிஞர் இந்திரன் அவர்களிடம் சொல்வேன்,"எனது முகவரி தெரியவில்லை என்றால், கவலைப்பட வேண்டாம் சார். ஓவியர்.சோ.சௌந்தரராசன், மூத்த பத்திரிகையாளர், நிறுவனர் தலைவர் LAW EXPOSURE ORDINANCE, மௌலிவாக்கம், சென்னை - 600 125 என்று எழுதி அனுப்பினாலே எனக்கு அஞ்சல் கிடைத்துவிடும். அவசியம் என நினைத்தால் எனது செல்பேசி எண்ணான 9092815209 என்ற எண்ணை எழுதலாம்" என்று சொல்வேன். அதன்படி அனுப்பப்பட்ட இந்திரன் சார் எழுதிய நூலான "உலகிலேயே சிறந்த புத்தகம்" அஞ்சலில் நேற்றுப் பெற்றேன்.
சரி நூலுக்குள் செல்வோம். இந்த நூல் 2021 புது வருட தினத்திலேயே வெளிபிட இந்திரன் சார் திட்டமிட்டிருந்த நிலையில், அச்சகத்தில் இருந்து வர தாமதமாகியதாக அறிகிறேன். இந்த நூலினை நூற்றாண்டை நெருங்கும் புதுச்சேரியில் வசிக்கும் கரிசல் எழுத்தாளர் கிஶராஜநாராயணன் சமீபத்தில் புதுச்சேரியில் வெளியிட்டார். ஓவியர், கலை, இலக்கிய விமர்சகர், மொழி பெயர்ப்பாளர்,,எழுத்தாளர், கவிஞர் இந்திரன் அவர்கள் நாற்பது நூல்கள் வரை எழுதியவர், மொழி பெயர்ப்பிற்காக "சாகித்திய அகடமி" விருதுப் பெற்றவர். தனது பதினைந்து ஆண்டு உழைப்பின் வழி, கொல்லனின் உலையில் புடம் போட்ட தங்கம் போல இந்த நூலினை மிக சிறப்பாக படைத்துள்ளார். உலகின் எந்த மொழிக்கும் ஏற்புடையதாக, அதை அப்படியே உள்வாங்கிக் கொள்ளும் சிறப்புடன் படைத்துள்ளார். "ஜென் தத்துவங்கள்" உள்ளடக்கிய இந்த நூல் நிச்சயமாக அவர் எழுதிய நூல்களில் ஆகச்சிறந்தது என்றால் மிகையல்ல.. ஒரு கலைஞர், எழுத்தாளர், கவிஞர் யாராக இருந்தாலும் அவர் படைக்கும் படைப்பானது இவருக்கானது என்று எண்ணிப் படைப்பது இல்லை. முகம் முன் தெரியாத ஓரத்து வாசகனுக்கும் சேர்த்தே படைப்பதுதான் சிறந்த படைப்பு. கவிஞர் இந்திரனைப் பொருத்த வரை இன்று வரை அதை கவனமாக கையாளக்கூடியவர். படைப்பாளருக்கும், வாசகருக்கும் இடையில் உள்ள பிரமாண்டம் என்ற இடைவெளியை முற்றிலும்"குறைக்க கூடிய வல்லமைப் பெற்றவர். இவரை சிலர் இலக்கிய

அரசியல்வாதியாக கருதினாலும், இவர் இலக்கிய அரசியலை ஏன்றும் விரும்பிய தில்லை. அது சிறந்த படைப்பாளிக்கு அவசியமில்லை என்பதையும் நன்கு உணர்ந்தவர். இந்த நூலின் வழியே இவர் சொல்லும் உன்னதமான கருத்து என்ன வென்றால், இவரது ஐம்பதாண்டு இலக்கியப் பயணத்தில், நூல் விமர்சனங்கள், கலை விமர்சனங்கள் என்று மகுடம் தரித்தவராக இருந்தாலும், மகுடங்களை மறுதலித்த இவர், இந்த நூலின் வழியாக தன்னை ஒரு சிறந்த வாசகனாகவும் தகவமைத்துக் கொண்டுள்ளார். இந்த நூலை வாசித்து அதன் வழி சிறந்த படைப்பை உருவாக்கும் சிறந்த வாசகனுக்கும் 5000, 3000, 2000 என மூன்று பரிசுகளும் வழங்கவுள்ளார். பொதுவாக பதிப்பகங்கள் தங்களது படைப்புகளுக்கு உரிய ராயல்டி சரியாக தருவதில்லை என்ற புகார்கள் உள்ள நிலையில், தனது யாளி பிரிண்ட் பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ள இந்த நூலை கூரியர் கட்டணம் உட்பட ரூபாய் 100 க்கு விற்பனை செய்கிறார். இலக்கிய தீவிர வாசகர்கள் வாங்கி பயடையுங்கள். புதிய இந்த முயற்சிக்கு நெஞ்சார்ந்த
வாழ்த்துகள் இந்திரன் சார்!




